Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 29 இதழ் - 7 ஜூலை 2016

தனிப்பிரதி ரூ.10/-



ஜெபியுங்கள் !! திட்டமிடுங்கள் !! பங்கு பெறுங்கள் !!

காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும், தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டமும் இணைந்து நடத்தும்

# பத்தொன்பதாம் வேதாகம கருத்தரங்கம்

# 19th Annual Bible Lectureship

**நாள் : அக்டோபர் 10, 11 - 2016** ( திங்கள், செவ்வாய் )
(அரசு விடுமுறை நாட்கள்)

**Date : October 10, 11 - 2016 ( Monday, Tuesday )**

**நேரம்**

திங்கள் : காலை 8:45 - மாலை 4:45 மணி
செவ்வாய் : காலை 8:45 - மதியம் 1:00 மணி

**இடம்**

**கிறிஸ்துவின் சபை வளாகம்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. தமிழ்நாடு.

- வெளியூரிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.
- தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடம் உண்டு.

தொடர்புக்கு : 04257 - 230030 செல் : 98427 - 30382, 99655 - 30385, 98652 - 90572.

## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 3 |
| 2. ஏன் நாங்கள் ஜெபத்தில்... | 11 |
| 3. பெண்கள் பகுதி | 16 |
| 4. வாலிபர் பகுதி | 20 |
| 5. சிறுவர் பகுதி | 23 |
| 6. மனுஷராலே கூடாதது தேவனாலே... | 25 |
| 7. சோதனையில் நம் நிலை | 30 |
| 8. நாம் எப்படி வாழ்வோம் ? | 34 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030  Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 29    July 2016    Issue - 7


ஆசிரியர் உரை

## தேவனும், உடைந்தவைகளும்

**ப**ழம்பெரும் பக்தன் யோபு தன் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில், “ **நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்** ” என்று விளம்பினார் ( யோபு 1 : 21 ). இப்பூமிக்குண்டான வாழ்வு பற்றிய இவரின் கூற்று உண்மையிலும் உண்மை. ஆயினும், இப்பூமியில் பிறந்து வாழ்கிற யாரும் வெறுமையான நிலையில் தங்கள் நாட்களைக் கழிப்பதில்லை. தங்கள் தேவைக்கும், தகுதிக்கும் ஏற்றாற்போல் பொருட்களை வாங்கிய வண்ணமே உள்ளார்கள். ஆம், உண்பதற்கும், உடுத்துவதற்கும், உறங்குவதற்கும் மாத்திரம் என்றில்லாமல் உட்காருவதற்கும், நிற்பதற்கும், நடப்பதற்கும், பிரயாணிப்பதற்கும் இன்னும் படிப்பதற்கும், எழுதுவதற்கும் என்று எல்லாவற்றுக்கும் ஏதோ ஒன்றை வாங்குகிறவர்களாகவே உள்ளார்கள்.

இப்படி இப்பூமியின் பயன்பாட்டிற்கென்று பொருள்களைத் தட்டிக் கொட்டி, தேடிப்பிடித்து, சுற்றித்திரிந்து, அலசி ஆராய்ந்து சல்லடை போட்டுச் சலித்து, தாங்கள் தான் கெட்டிக்காரர்கள் என்ற நினைப்போடும், பெருமிதத்தோடும் வாங்கினாலும், ஒரு குறிப்பிட்ட கால உபயோகத்திற்குப் பிறகு அவைகள் தேய்ந்தோ, உடைந்தோ, கிழிந்தோ போவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இவைகளில் உடைந்து போனவைகள் இனி உபயோகத்திற்கு ஆகாது, குப்பையிலே தான் போட வேண்டுமென்ற எண்ணத்தை ஏற்படுத்தி விடுகிறது. ஒருவேளை, நாம் எவ்வளவுதான் செலவழித்து ஒரு பொருளை வாங்கியிருந்தாலும் அது உடையும் போது “ என்ன செய்வது ” என்ற யதார்த்தத்தை நம் மனம் எப்படியோ ஏற்றுக்கொள்கிறது.

போகிறபோக்கில் இம்மனப் பக்குவம் வருவதற்கான காரணங்களில் ஒன்று, நாம் நம்முடைய திராணியின் எல்லையைப் புரிந்து வைத்திருப்பது தான்.

இப்படி நம்முடைய நிலையைத் தெரிந்து வைத்திருப்பது ஒருபுறம் மகிழ்ச்சியைத் தந்தாலும், பரலோக தேவனின் எல்லையில்லா வல்லமை பற்றிய அறிவில்லாதவர்களாகவே நாம் பெரும்பாலும் வாழ்ந்து கொண்டிருப்பது கவலை தருவதாகவே உள்ளது. இது ஒரு கசப்பான உண்மை. ஆயினும், வேதாகமத்தின் பக்கங்களைத் தேடி வாசித்தால், உடைந்தவைகளையும், நொறுங்கினவைகளையும், உருக்குலைந்தவைகளையும் தேவன் தமது நோக்கத்திற்காகப் பயன்படுத்தியிருக்கிறார் என்னும் பேருண்மையை நாம் கண்டு கொள்ள முடியும். ஆம், ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லாவற்றையும் உண்டாக்கின தேவனுக்கு அப்படிச் செய்வது " லேசான காரியம் ".

நம் தேவனைப்பற்றிய இப்பேருண்மையை நாம் அறிந்து வைத்திருப்பது அவசியம். ஏனெனில், இப்பூலோக வாழ்க்கைப் போராட்டத்தில் பல எதிரான நிலைகளை நாம் கடந்து செல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம். அப்பொழுதெல்லாம் உடைந்து போகிறோம், நொறுங்கி விடுகிறோம், நிலைகுலைந்து தவிக்கிறோம். அப்படிப்பட்ட நேரங்களில், இனி நான் எதற்கும் லாயக்கற்றவன் என்ற எண்ணத்திற்கும் இழுத்துச் செல்லப்படுகிறோம். ஆனால், தேவன் மீது நம்பிக்கையுடையவர்கள் ஒருபோதும் அப்படி நினைக்க வேண்டிய அவசியமில்லை.

என்னுடைய இக்கருத்துக்கு வலு சேர்க்கும்படியாய் ஒரு மூன்று உதாரணங்களை உங்கள் கண்களுக்கு முன்பாகக் கொண்டு வந்து எடுப்பாக நிறுத்தப்போகிறேன். சரியா?

### I உடைக்கப்பட்ட பானையைக் கொண்டு வெற்றி தந்தார்

உடைந்தவைகளைத் தேவன் தமது நோக்கத்திற்காகப் பயன்படுத்த முடியும் என்பதற்கு உதாரணமாக உடைந்த பானையைக் கொண்டு தேவன் வெற்றி கொடுத்ததைக் கூறலாம்.

இந்த உடைந்த பானையின் காலம், ராஜாக்களின் காலத்துக்கு முந்தின நியாயாதிபதிகளின் நாட்கள். சுமார் 350 ஆண்டுகளை உள்ளடக்கிய இக்காலகட்டம் இஸ்ரவேல் சரித்திரத்தில் ஏற்ற இறக்கங்களைக் கொண்டது. தங்கள் கீழ்ப்படியாமையினாலும், விக்கிரக வணக்கத்தினாலும் இஸ்ரவேல் மக்கள் எதிரிகளால் திரும்பத் திரும்ப மேற்கொள்ளப்

பட்டார்கள். இப்படி மேற்கொள்ளப்பட்டு எதிரிகளால் ஒடுக்கப்படும்போது, தேவனை நோக்கி முறையிடுவார்கள். தேவனும் மனமிரங்கி ஒரு நியாயாதிபதியைக் கொண்டு விடுவிப்பார். கொஞ்ச காலம் தாக்குப்பிடிப்பார்கள். பிறகு, வழக்கம் போல " வேலையைக் " காட்ட ஆரம்பித்து விடுவார்கள். இக்காரியத்தில், " அவர்களைப் போல் நாமா ? " அல்லது " நம்மைப் போன்று அவர்களா? " என்பது விவாதத்துக்குரிய ஒன்று. பட்டிமன்றம் வைத்தால் படு சுவாரசியமாக இருக்கும்!

சரி, ஒருசமயம் இஸ்ரவேலை எதிர்க்கும்படியாக வந்த மீதியானியரின் பாளையம் மோரே மேட்டிற்குப் பின்னான பள்ளத்தாக்கில் பரவிக்கிடந்தது ( நியா. 7 : 2 ) ஏராளமாயிருக்கிற இவர்களை எதிர்ப்பதற்கு கிதியோன் 32,000 பேரை ஆயத்தம் செய்தான். தேவன் அவர்களுக்கு வெற்றியைத் தர ஏற்கனவே முடிவு செய்துவிட்டார். ஆயினும், நம்முடைய ஆள் பலத்தால் வெற்றி வசமானது என்ற மமதை இஸ்ரவேலருக்கு வந்துவிடக் கூடாது என்று எண்ணி, முதல் கட்ட சோதனையில் 32,000 ஐ 10,000 ஆக்கி, இரண்டாவது சோதனையின் மூலம் அதை 300 ஆகக் குறைத்து விட்டார். தேவனின் இச்செயலைப் புரிந்து கொள்ள முடியாமல் கிதியோன் தடுமா றினபோது, "... **கர்த்தர் அவனை நோக்கி நீ எழுந்து அந்தச் சேனையினிடத்திற்குப் போ: அதை உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்** " (நியா 7 : 1) என்று கூறி, அவனைப் பெலப்படுத்தி வழி நடத்தினார்.

பிறகு கிதியோன் தேவன் பொறுக்கியெடுத்துக் கொடுத்த அந்த 300 பேரை மூன்று படையாக வகுத்து, அவர்கள் ஒவ்வொருவர் கையிலும் ஓர் எக்காளத்தையும், வெறும் பானையையும், அந்த பானைக்குள் வைக்கும் தீவட்டியையும் கொடுத்து, அவர்களை நோக்கி, நான் செய்வதைப் பார்த்து , அப்படியே நீங்களும் செய்யுங்கள். இதோ, நான் பாளையத்தின் முன்னணியில் வந்திருக்கும்போது எப்படிச் செய்கிறேனோ அப்படியே நீங்களும் செய்ய வேண்டும் என்றான். பிறகு, தேவன் கிதியோனுக்குச் சொன்னபடியே நடுஜாமத்தின் துவக்கத்தில் ஜாமக்காரரை மாற்றி வைத்த பின்பு, கிதியோனும் அவனோடிருந்த நூறுபேரும் அந்த ஜாமத்தின் துவக்கத்திலே பாளையத்தின் முன்னணியில் வந்து எக்காளங்களை ஊதி, தங்கள் கையிலிருந்த பானைகளை உடைத்தார்கள். மூன்று படைகளின் 300 பேரும் எக்காளங்களை ஊதி, பானைகளை உடைத்துத் தீவிட்டிகளைத் தங்கள் இடது கைகளிலும், ஊதும் எக்காளங்களைத் தங்கள் வலது கைகளிலும் பிடித்துக் கொண்டு கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம் என்று ஆர்ப்பரித்தார்கள் (நியாயா. 7 : 16 - 20).

தொடர்ந்து வாசிக்கும்போது, எந்தப் போர் முறைக்கும் சற்றும் சம்பந்தமில்லாத வகையில், இந்த 300 பேரும் பாளையத்தைச் சுற்றிலும் தங்கள் நிலையிலே " இடித்த புளியாக " அப்படியே நின்றிருக்கிறார்கள். ஒன்றை எடுத்தார்கள் என்றோ, ஓங்கி எறிந்தார்கள் என்றோ, பாய்ந்து ஓடினார்கள் என்றோ எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால், இவர்களை மேற்கொள்ள வந்த மீதியானியரோ பின்னங்கால் பிடரியில் அடிக்க சிதறி ஓடினார்கள்.

தன்னுடைய ஜனங்களை மேற்கொள்வதற்கு ஆயுதங்களோடு வந்த மீதியானியரை வீழ்த்துவதற்கு இஸ்ரவேலர் எடுத்துச் செல்ல தேவனால் அனுமதிக்கப்பட்டவைகளில் ஒன்று வெறும்பானை, ஆம் மண்பானை. வாளோடும், வேலோடும் நிற்கும் ஒரு பெரும் படையை எதிர்கொள்ள கொஞ்சம் பேர் பானையைத் தூக்கிக் கொண்டு போவதை அப்படியே கற்பனை செய்து பாருங்கள்! சிரிப்பு பொத்துட்டு வருதா? இல்லையா? ஆனாலும், தேவன் கொடுத்த ஆயுதம் வெறும் மண்பானைதான். கிதியோன் தவிர்த்து இந்த 300 பேரும் பானையைத் தூக்கிக் கொண்டு போனபோது வெற்றியோடு திரும்பி வருவோம் என்ற நினைப்போடுதான் போயிருந்திருப்பார்களா? வாய்ப்பு குறைவு தான்.." இன்றோடு தீர்ந்தோம் " என்ற எண்ணமே மேலோங்கி இருந்திருக்கும். இப்படி நெஞ்சிலே பயம் நர்த்தனம் ஆடிக்கொண்டிருந்த நேரத்தில், அந்தப் பானையையும் உடையுங்கள் என்று கட்டளை வருமானால், எப்படியிருந்திருக்கும்? " அட, இதுவும் போச்சா " என்று தானே எண்ணியிருப்பார்கள்.

ஆயினும், அங்கே பானை உடைக்கப்படாமல் இருந்திருக்குமானால் வெற்றி இல்லை. உடைக்கப்பட்ட பானைதான் வெற்றிக்கு வழிகோலியிருக் கிறது. உடைந்த பானையின் சில்லுகளை எடுத்து, வீசி எறிந்து அதன் மூலம் வெற்றி பெறவில்லை என்பது உண்மைதான். எதிரிகள் பட்டயத்தால் தங்க ளை தாங்களே அழித்துக் கொள்வதற்கும், சிதறி ஓடுவதற்கும் உடைந்த பானை நேரிடையாகச் சம்பந்தப்படவில்லை என்பதும் உண்மை தான். இங்கே கவனிக்க வேண்டியது, தேவன் சொன்னபடி நடந்து கொண்டார்களா, இல்லையா என்பது தான். வெற்றியின் இரகசியம் அதில்தான் அடங்கி யிருக்கிறது. ஆம், பானையை உடையுங்கள் என்றால் உடைக்க வேண்டும். அப்படி உடைக்கப்படுவது வெற்றிக்கு அவசியம் என்று தேவன் சொல்லும்போது, அப்படியல்ல என்று சொல்லுவதற்கும், தேவனைத் தடுப்பதற்கும் நாம் யார்?

அன்பானவர்களே, இது போலத்தான் நம்முடைய வாழ்க்கையிலும்,

நாம் நமக்குத் தேவையான வெற்றியைப் பெற்றுக்கொள்வதற்கு, நாம் உடைக்கப்படுவது அவசியம் என்று தேவன் கருதினால் அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். பிரச்சனைகளால் உடைக்கப்படலாம், வியாதி களினால் உடைக்கப் படலாம், தோல்வி, ஏமாற்றம், இழப்பு என்று பல வகை களிலே உடைக்கப்படலாம். இப்படிப்பட்ட நேரங்களில் ஐயோ உடைக்கப் படுகிறோமே என்று அலறவோ, கலங்கவோ வேண்டாம். தேவச் சித்தத்திற்கும், அவருடைய வழிநடத்துதலுக்கும் நம்மை ஒப்புக் கொடுத்து வெற்றியுள்ள வாழ்க்கையை நாம் நடத்துவோமாக!

**II நொறுக்கப்பட்ட இருதயத்துக்கு அங்கீகாரம் தந்து கனப்படுத்தினார்.**

உடைந்து நொறுங்கினவைகளைத் தேவன் தமது நோக்கத்திற்காகப் பயன்படுத்த முடியும் என்பதற்கு அடுத்த உதாரணமாக நொறுங்குண்ட இருதயத்துக்கு தேவன் அங்கீகாரம் கொடுத்ததைக் கூறலாம்.

இஸ்ரவேலை ஆண்ட ராஜாக்களில் இரண்டாவது ராஜா ஈசாயின் குமாரனாகிய தாவீது. இளம் வயதில் ஆடு மேய்க்கும் சிறுவனாக இருந்த காலந்தொட்டு அரியணையில் அமர்த்தப்பட்ட நாள் வரைக்கும், இன்னும் சொல்லப்போனால் இவன் மரிக்கும் பரியந்தம் தேவனுடனான இவன் உறவு குறித்துப் பேச வேண்டுமானால் மேல் மூச்சு வாங்கும் வரை நாம் பேசிக்கொண்டே இருக்கலாம். ஆம், அவ்வளவு இருக்கு! ஆயினும், அப்படி நாம் பேச முற்படும்போது, இவன் தன் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் செய்த செயல் நம்மைப் பெருமூச்சு விட வைக்கும். " அட தாவீது, நீயுமா இப்படி " என்று மூச்சே நின்று போகும்படி நேரும். மிகப்பெரும் சறுக்கல். பத்துக் கட்டளைகளில் மூன்றைப் பகிரங்கமாக. அங்கே மீறினான்.

அச்சறுக்கல் பற்றிய விபரம் II சாமுவேல் 11-ம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. இதுபற்றி இங்கே விபரமாக எழுதுவதற்கு இது ஒன்றும் கிறிஸ்தவ உலகம் அறிந்திராத ஓர் இரகசியம் அல்ல: சொல்லப் போனால், இந்தத் தாவீது பற்றிய ஏராளமான நற்காரியங்களை அறியாதவர்கள் கூட இவனின் இப்பாதகச் செயலை அறிந்து வைத்திருப்பர். ஒன்றை நான் இங்கே அழுத்தமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். ஆபிரகாமின் பொய் பற்றியோ, யாக்கோபின் ஏமாற்று பற்றியோ, தாவீதின் இந்த அத்து மீறல் பற்றியோ வேதாகமம் அப்படியே புட்டு வைப்பதற்கான காரணம், தேவன் மீது அபார நம்பிக்கை வைத்திருப்பவர்கள் தங்கள் பக்தி வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் வெகு கவனமாக இருந்து ஆன்மீக விபத்துகளைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காகத்தானேயொழிய, மற்றபடி நாமும் அப்பாவக்குழியில் விழுந்து நாசமடைவதற்கல்ல. எச்சரிக்கை தேவை.

மாற்றானின் மனைவி பத்சேபாளிடத்தில் பாவம் செய்து, அது பற்றிய உணர்வில்லாமல் இருந்தபோது, தேவன் நாத்தானைக் கொண்டு ஓர் உதாரணத்தின் மூலம் உணர்த்தினார். உடனடியாக உணர மறுத்தாலும், " நீயே அந்த மனிதன் " என்று நாத்தான் நெக்கென்று இடித்துக் காட்டியபோது, **நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தேன்** என்று அறிக்கை செய்தான் ( II சாமு. 12 : 13) . இங்கே இந்தளவு தான் உள்ளது. ஆயினும் 51-ம் சங்கீதம் அப்பொழுது அவன் பட்ட மனவியாகுலத்தின் விளக்கவுரையாக எழுதப்பட்டுள்ளது. இச்சங்கீதத்தில், அவன் ஆவியில் எந்தளவு உடைக்கப் பட்டான், அவன் இருதயம் எப்படி நொறுங்கிப் போனது என்பதை அவன் பயன்படுத்தின வார்த்தைகளில் நாம் காண முடியும்.

சங்கீதம் 51 : 4-ல் , " **தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவம் செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்** " என்று புலம்பினான். மேலும், 51 : 10-ல் **சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்** என்று கெஞ்சினதோடு, வசனம் 17-ல் " **தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான், தேவனே நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்** " என்று கூறி தன்னை மீண்டும் ஏற்றுக் கொள்ளும்படியாக மன்றாடினான்.

இப்படி இவன் தன் இருதயத்தை உடைத்து நொறுக்கினதைத் தேவன் கண்டு, " **என் இருதயத்துக்கு ஏற்ற தாசன்** " (அப். 13 : 22) என்று சாட்சி பகிர்ந்ததோடு நிற்காமல், " **இவனுடைய சந்ததியிலே தேவன் தமது வாக்குத்தத்தத்தின்படியே இஸ்ரவேலருக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப் பண்ணினார்** " (அப் , 13 : 23). நோவா, யோபு, ஆபிரகாம், மோசே என்று எத்தனையோ நீதிமான்கள் இருந்தும், இவனல்லவா தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற தாசன் என்ற பெயரைத் தட்டிச் சென்றுள்ளான். அது மட்டுமா, இயேசு " தாவீதின் குமாரன் " என்றல்லவா அழைக்கப் பட்டிருக்கிறார். இதைவிட வேறென்ன வேண்டும் இவனுக்குக் கிடைத்த அங்கீகாரத்திற்கு?!

அன்பானவர்களே, ஆவியில் நொறுங்குண்ட இருதயத்துக்கு தேவன் கொடுக்கும் அங்கீகாரத்தை கவனிக்கத் தவறிவிட வேண்டாம். வெறும் அங்கீகாரத்தோடு நிறுத்தாமல், நொறுங்குண்ட இருதயத்தை பெருமைப் படுத்தி, கனப்படுத்தியுமிருக்கிறார். அப்படியானால், ஆவிக்குரிய நிலையில், நம்முடைய இருதயங்கள் தேவனுக்கு முன்பாக எப்படி இருக்கிறது?

தேவ அங்கீகாரமும், தேவ ஆசீர்வாதமும், தேவன் கொடுக்கும் கனமும் நமக்கும் வேண்டுமானால், தேவனுக்கு விரோதமான பாவங்களினிமித்தம் நம்முடைய இருதயங்கள் நொறுக்கப்பட்டு, பாவச் சிந்தைக்கும், பாவச் செயலுக்கும் பாடை கட்டப்பட்டாக வேண்டும். கட்டுவோமா?

### III உருக்குலைந்த சரீரத்தைக் கொண்டு இரட்சிப்பை ஈந்தார்

உடைந்து, நொறுங்கி, உருக்குலைந்து போனவைகளைத் தேவன் தமது நோக்கத்திற்காகப் பயன்படுத்த முடியும் என்பதற்கு இன்னுமொரு உதாரணமாக உருக்குலைந்த சரீரத்தைக் கொண்டு மனிதக்குலத்துக்கு இரட்சிப்பு நல்கியதை கூவிக் கூவி கூறலாம்.

இங்கே உடைந்தது, நொறுங்கியது என்ற வார்த்தைகளை இயேசுவின் சரீரப் பாடுகளோடு நான் சம்பந்தப்படுத்தும் போது, " அது எப்படி " என்று உங்களில் சிலருடைய புருவங்கள் உயரக்கூடும். எப்படியெனில், அவரு டைய எலும்புகளில் ஒன்று கூட முறிக்கப்படாது என்று முன்னுரைக்கப்பட்டு (சங்.34 : 20) அது அப்படியே நிறைவேறியிருக்கும்போது (யோவான் 19 : 39 ) எப்படி இப்படிக் கூறலாம் என்று முணுமுணுப்பது காதில் விழுகிறது. உண்மைதான். உங்கள் முணுமுணுப்பில் நியாயம் இல்லாமலில்லை. ஆயினும், அவருடைய சரீரம் நொறுக்கப்பட்டது என்று ஆவியானவர் ஏசாயாவைக் கொண்டு எழுதியுள்ளார். **நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்** என்று (ஏசாயா 53 : 5).

சொல்லப்போனால், உடைக்கப்பட்டது, நொறுக்கப்பட்டது என்பதற்கும் மேலாக இயேசுவின் சரீரம் நம்முடைய பாவங்களினிமித்தம் உருக் குலைந்து போனதென்று சொல்வதே சரியாக இருக்கும். " தீர்க்கதரிசனங் களின் சிகரம் " என்றழைக்கப்படும் ஏசாயா 53ம் அதிகாரம் இயேசுவின் சரீரம் என்னமாய் பாடுபடும் என்பதை மிகத் தத்ரூபமாக எடுத்துரைக்கிறது. அங்கே முன்னுரைக்கப்பட்டவைகளின் நிறைவேறுதலையே நற்செய்தி நூல்களில் நாம் காண முடியும். அவருடைய சரீரம் உருக்குலைய ஆரம் பித்தது ஏதோ சிலுவையில் தான் என்று தப்புக் கணக்குப் போட்டு விடாதீர்கள். உண்மையில், சிலுவைக்கு முன்பாக கெத்செமனே தோட் டத்தில் அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார் அல்லவா அப்பொழுதே ஆரம்பமாகிவிட்டது. அங்கே, " அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையிலே விழுந்தது. பிறகு, வஞ்சக முத்தத்தினால் காட்டிக் கொடுக்கப்பட்டு, விசாரணை என்ற பெயரில் எருசலேம் நகர

வீதிகளில் இராப்பகலாக அலைக்கழிக்கப்பட்டார்.

இவைகளுக்குப் பிறகு தான் சவுக்கடி, முள்முடி, துப்புதல், அறைதல், பரியாசம் செய்தல், ஆணியடித்தல், விலாவில் குத்துதல் என்று எல்லாக் கொடுமைகளும் அரங்கேறியது. அங்கே இயேசுவின் சரீரம் எப்படி இருந்திருக்கு மென்று அப்படியே கற்பனை செய்து பாருங்கள். அது பற்றி எழுதுவதற்கு எனக்குப் போதுமான அறிவும் இல்லை. தேவையான வார்த்தை வளங்களும் இல்லை. ஆயினும், உச்சி முதல் பாதம் வரை காயங்களும், காயங்களில் வழிந்த இரத்தங்களும் காணப்பட்ட சரீரத்தை நொறுங்கி, உருக்குலைந்த சரீரம் என்று சொல்ல முடியுமா, முடியாதா? நிச்சயமாக முடியும். இந்தச் சரீரம் இத்தோடு " முடிந்தது " என்பது இயேசுவைக் கொலைக்கு ஒப்புக் கொடுத்தவர்களின் கணக்காகவும், நினைப்பாகவும் இருந்தது.

ஆனால், சர்வ வல்ல தேவன், " அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை உயிரோடே எழுப்பினார் " ( அப். 2 : 29 ). எழுப்பின தோடல்லாமல், உருக்குலைந்த சரீரத்தோடு சிலுவையில் அறையப்பட்ட இந்த இயேசுவையே தேவன் " ஆண்டவரும், கிறிஸ்து வமாக்கினார் " (அப். 2 : 36) இதன் மூலம், " அவராலேயன்றி வேறொரு வராலும் இரட்சிப்பு இல்லை " (அப். 4 : 12) என்று உலகறியச் செய்தார். ஆம், இயேசுவின் சரீரம் உருக்குலைய தேவன் அனுமதிக்காதிருந்தால் உங்களுக்கும், எனக்கும் இரட்சிப்பு இல்லை. நம்பிக்கையற்றவர்களாக வாழ்ந்து, விதி வந்ததால் செத்து, நித்திய ஆக்கினையை அடைந்திருப் போம். உருக்குலைந்த இயேசுவின் சரீரத்தை தேவன் தம்முடைய நோக்கத்திற்காக எப்படி மகிமையாய் பயன்படுத்தினார் என்று பாருங்கள். தேவ வல்லமையை புரிந்து கொள்ளுங்கள்.

ஆகையால், அருமையானவர்களே ! இப்பூமிக்குண்டான வாழ்க்கை யிலும், பரத்துக்கடுத்த வாழ்க்கையிலும் நாம் எந்த நிலையிலும் சோர்ந்து போக வேண்டாம். ஆம், தேவனால் உடைக்கப்பட்டதைக் கொண்டு வெற்றியைக் கொடுக்க முடியும். நொறுங்கிப் போனதை அங்கீகரித்துக் கனப்படுத்த முடியும். உருக்குலைந்து போனதை மகிமைப்படுத்தி மானிடத்தை இரட்சிக்க முடியும். ஏனென்றால், அவர் தேவன். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக !

# ஏன் நாங்கள் ஜெபத்தில் நம்பிக்கை வைக்கிறோம்?

Bro. J.C சோட்

ஜெபம் என்பது ஒரு வேதாகம மைய நோக்கம். ஜெபம் என்பது தேவனிடம் பேசுவது, சொல்வது அல்லது தேவனிடம் வேண்டிக் கொள்வது என விளக்கப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் இப்படிச் சொல்லியுள்ளார். " நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் " என்று (பிலிப்பியர் 4 : 6)

தேவனுடனான நம் உறவில், அவர் நம் தகப்பனாயிருக்கிறார், கிறிஸ்தவர்களாகிய நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். தேவனைப் பொறுத்தவரை அவருக்கு எதுவும் தேவை இல்லை. அவர் நித்தியமானவர், சர்வவல்லவர். அவர் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றும், உறைவிடமுமாயிருக்கிறார். எனவே தான், யாக்கோபு இப்படிச் சொல்கிறார். " நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில் ; யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை " ( யாக். 1 : 17 ). பிள்ளைகளாயிருக்கும் நமக்கு தேவன் தேவை. தேவைகளுக்கும், சோதனைகளை மேற்கொள்வதற்கான உதவிக்கும், பாவம் செய்யும் போது பாவமன்னிப்படைவதற்கும் நாம் தேவனிடம் செல்ல வேண்டும்.

இப்போது ஜெபம் பற்றியும், கர்த்தரிடம் விண்ணப்பம் செய்வது பற்றியும், நம்முடைய ஜெபங்களைக் கேட்டு பதிலளிப்பதாக அவர் தந்திருக்கும் உத்திரவாதம் பற்றியும் பேசுகின்ற சில வேத வசனங்களை நாம் பார்க்கலாம். கிறிஸ்து தம்முடைய நாட்களில் வாழ்ந்த சீடர்களிடம் இப்படிச் சொன்னார். " நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் " (யோவான் 14 : 13, 14 ). மறுபடியும் இயேசு, " நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது

உங்களுக்குச் செய்யப்படும், நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" (யோவான் 15 : 7, 8) என்று சொன்னார்.

இயேசு இவ்விதமாகவும் சொன்னார். " நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவை கேட்டுக் கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்க, நீங்கள் போய்கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்" (யோவான் 15 : 16)

மலைப்பிரசங்கத்தின் போது இயேசு, " கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" என்றார் (மத்தேயு 7 : 7, 8)

அப்போஸ்தலனாகிய யோவான், " நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" (I யோவான் 5 : 14, 15) என எழுதியுள்ளார்.

மேலே நாம் வாசித்த வேத வாக்கியங்களிலிருந்து நாம் எப்படிப்பட்ட விண்ணப்பத்தைச் செய்தாலும், எவ்வித முன் நிபந்தனைகளும் விதிக்காமல், கர்த்தர் நம்முடைய ஒவ்வொரு ஜெபத்திற்கும் பதில் அளிப்பார் என்று நாம் முடிவுக்கு வரமுடியும். ஆனால், வேத வாக்கியங்களை நாம் சற்று நெருக்கமாகப் பார்க்கும்போது, தேவனால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஜெபத்தையும், தேவன் கேட்டு பதில் தரக்கூடிய ஜெபத்தையும், செய்வதில் எண்ணற்ற காரியங்கள் சம்பந்தப்பட்டிருப்பதை நாம் காணலாம்.

முதலாவது, ஒருவருடைய ஜெபத்திற்கு பதில் கிடைக்க வேண்டுமானால் அவர் கிறிஸ்தவனாக, தேவனுடைய பிள்ளையாக இருக்க வேண்டும் என்று வேத வசனங்கள் போதிக்கின்றன. " பாவிகளுக்கு தேவன் செவி கொடுப்பதில்லை" யென்று யோவான் 9 : 31 – ல் நாம் வாசிக்கிறோம். பாவிக்கு தேவன் ஏன் செவி கொடுக்கமாட்டார்? பாவத்தின் காரணமாக தேவனுக்கும், அவரிடத்தில் ஜெபிக்க முயற்சிக்கும் தனிப்பட்ட நபருக்கும்

இடையில் பாவம் வருகிறது. நீண்ட காலத்திற்கு முன்பு தீர்க்கதரிசி இப்படியாகச் சொன்னார். " **இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினையை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது** " (ஏசாயா 59 : 12). மறுபடியும், ஒரு பாவி, தான் தேவனுடைய பிள்ளையாக இல்லாதபோது, அந்த தேவன் தன் ஜெபத்தைக் கேட்டு அதற்கு பதிலளிப்பார் என எதிர்பார்த்தால், ஒரு கிறிஸ்தவனுக்கு, கிறிஸ்தவனல்லாதவனை விட என்ன மேன்மை இருக்கும்? தேவனிடத்தில் ஜெபிப்பது என்று வரும் போதும், தேவன் அந்த ஜெபத்தைக் கேட்டு பதிலளிப்பார் என்று நம்பிக்கை கொள்ளும்போதும், சிலர் நினைப்பதற்கு மாறாக, ஒருவன் கிறிஸ்தவனாக இல்லாமல் இருப்பதற்கும், ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது.

இரண்டாவது, ஒரு தேவனுடைய பிள்ளையின் ஜெபங்கள் கேட்கப்பட வேண்டுமானால், அவன் நீதியுள்ளவனாகவும், உண்மையுள்ளவனாகவும் இருக்கவேண்டுமென்று தேவனுடைய வார்த்தை போதிக்கிறது. பேதுரு தன்னுடைய நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இப்படி எழுதினார். " கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது " (I பேதுரு 3 : 12). ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்தால் மனந்திரும்பும்படி, தன் தவறுகளை அறிக்கையிட்டு, அவன் மன்னிப் பைப் பெறும்படி கர்த்தரிடத்தில் ஜெபிக்க வேண்டும். யாக்கோபு இப்படிச் சொல்கிறார். " **நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது** " (யாக்கோபு 5 : 16).

மூன்றாவது, அவரைப் பின்பற்றுபவர்கள் தங்களுடைய ஜெபங்கள் கேட்கப்படுவதற்கு வெறுமனே அவரிடத்தில் வேண்டிக் கொண்டால் போதுமானதாயிருந்தது என்பது போல் தெரியும். ஆனால், வசனங்களைக் கவனித்தால், அந்த வசனங்களில் வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருப்பதற்கு முன்போ அல்லது அதற்குப் பின்போ, கர்த்தர் அதற்கான குறிப்பிட்ட நிபந்தனைகளைத் தந்துள்ளதைக் காணலாம். உதாரணத்திற்கு, கிறிஸ்து,

‘என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் ” என்று யோவான் 14 : 14 -ல் சொன்னார். ஆனால், அடுத்த வசனத்திலேயே கிறிஸ்து, “ நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளை கைக்கொள்ளுங்கள் ” என்று சொன்னார். தேவனுடைய பிள்ளை தேவனி டத்தில் எதை வேண்டிக்கொண்டாலும் கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்து கற்ப னைகளை கைக்கொள்ளவில்லையென்றால், கர்த்தர் எதையாவது கொடுப்பார் என கற்பனை செய்து பார்க்க முடியுமா? யோவான் 15 : 7 -ல் இயேசு இப்படியாகச் சொன்னார். “ நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும் ” என்று.

ஒருவர் கர்த்தருக்குள் நிலைத்திருந்து, கர்த்தருடைய வார்த்தை அவருக்குள் நிலைத்திருந்தால், அந்த நபர் எப்படிப்பட்டவராயிருப்பார்? நிச்சயமாக அப்படிப்பட்டவர் ஓர் உண்மையுள்ள தேவனுடைய பிள்ளையாயிருப்பார். ஆனால், ஒருவர் கர்த்தருக்குள் நிலைத்திராமல், கர்த்தருடைய வார்த்தை அவருக்குள் நிலைத்திராமல் இருந்தால், அந்த நபருடைய வேண்டுதலுக்கு கர்த்தர் பதில் கொடுப்பாரா? நிச்சயமாகக் கொடுக்கமாட்டார்.

இறுதியாக, I யோவான் 5 : 14, 15 வசனங்களில், நம் ஜெபங்கள் தேவனுடைய சித்தத்தின்படி இருந்தால், அவைகளைக் கேட்டு தேவன் பதிலளிப்பார் என்று யோவான் தெளிவுபடுத்தியிருக்கிறார். பிள்ளைகளை நேசிக்கிற ஒரு தகப்பன், பிள்ளைகளுக்கு தீங்கு செய்கிறவைகளை அவர்கள் கேட்டாலும் கொடுக்க மாட்டான். நம்முடைய பரம பிதாவின் காரியத்திலும் இது உண்மையாயிருக்கிறது. சில காரியங்கள் நமக்குக் கிடைத்தால் நன்றாக இருக்குமென்று நாம் நினைப்போம். ஆனால், சர்வ ஞானமுள்ள நம் பிதா அதை வேறு விதமாகப் பார்ப்பார். இங்கே, ஒரு காரியத்தை நாம் நிச்சயித்துக் கொள்ள முடியும். அது, நம் அன்புள்ள தகப்பன் நமக்கு எது சிறந்ததாயிருக்குமோ அதற்கேற்றபடி பதிலளிப்பார். நாம் உண்மையாகவே கர்த்தரிடம் அன்பு கூர்ந்தால் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் என்கின்ற பவுலின் வாக்கியம் நம் நினைவில் இருக்க வேண்டும் (ரோமர் 8 : 28).

நாம் எப்போதுமே நோக்கிப் பார்ப்பதற்கு நமக்கு ஒரு பிதா இருப்பதால், கிறிஸ்தவர்களாக நாம் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்து மனிதர்கள் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டும் என்று சொன்னார் (லூக்கா 18 : 1). நாம் இடைவிடாமல் ஜெபம் பண்ணவேண்டும் என்று பவுல் சொன்னார் (I தெச. 5 : 17). ஆதிக்கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய

உபதேசத்திலும், ஜெபத்திலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என நமக்குச் சொல்லப்பட்டிருக்கின்றது (அப். 2 : 42). மறுபடியும், யாக்கோபு ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக் கடவன் என்று சொல்கிறார் (யாக். 5 :13). தொடர்ந்து யாக்கோபு சொல்லும் போது, நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது என்கிறார் (யாக். 5 : 16). வியாதியில் இருப்பவர்களுக்காக நாம் ஜெபிக்கும்போது அற்புதங்கள் மூலம் கிரியை செய்வதாக கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணவில்லை. ஆனால், ஜெபங்கள் மிகப்பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும். தேவன் இயற்கை விதிகள் மூலமாக, மருந்துகள், மருத்துவர்கள், செவிலியர்கள் மூலமாக நோயாளியை சுகப்படுத்துவதற்கு கிரியை செய்வார். தேவன் தம்முடைய தீர்மானத்தின்படி காரியங்களை மாற்ற கிரியை செய்யும் வழியையும், விதத்தையும் பெரும்பாலும் நாம் குறைத்து மதிப்பிட்டு வருகிறோம். சில வேளைகளில், நாம் தேவன் தம்முடைய வல்லமையைக் காட்டுவதற்கான ஒரே வழி அல்லது தேவனால் ஏதோ ஒன்றை செய்ய முடியும் என்று காட்டுவதற்கான ஒரே வழி அற்புதம் தான் என்று நினைக்கிறோம். ஆனால், அது அப்படியல்ல. நம்முடைய விசுவாசம் எங்கே? மேலும் பிணியாளிக்குத்தான் வைத்தியன் தேவை என்று இயேசு சொன்னார், அதே வேளையில் நாம் நம் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பார்க்கக்கூடாது (மத். 9 : 12 ; மத். 4 : 7).

நிச்சயமாகவே, நம்முடைய ஜெபங்கள் பிதாவினால் கேட்கப்பட வேண்டுமென்றால், நமக்காகப் பரிந்து பேசுகிறவரும், மத்தியஸ்தரும், பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்துவின் நாமத்தினாலே நாம் ஜெபிக்க வேண்டும். ( I யோவான் 2 : 1; I தீமோத் தேயு 2 : 5 ; எபிரேயர் 3 : 1).

ஜெபத்தில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா? பிதா உங்கள் ஜெபங்களைக் கேட்டு உங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றுவார் என்கிற நிச்சயத்தோடு உங்களால் ஜெபிக்க முடிகிறதா? நீங்கள் கிறிஸ்தவராக இல்லையென்றால் பிதாவிடம் ஜெபிக்கத்தக்கதான உறவில் நீங்கள் இல்லை. அப்படிப்பட்ட உறவை நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுவதின் மூலம், பெற்றுக்கொள்ளலாம் ( எபிரெயர் 11 : 6; யோவான 14 : 1; மத்தேயு 10 : 32; அப். 2 :38). இதை நீங்கள் செய்யும் போது, கர்த்தர் உங்களை இரட்சித்துத் தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார். ( அப்போஸ்தலர் 2 : 47 ). பின்பு, கர்த்தருடைய குடும்பத்தின் அங்கத்தினராக, கர்த்தருடைய பிள்ளையாக உண்மையாயிருந்தால், தேவன் உங்கள் ஜெபங்களைக் கேட்டு அவைகளுக்கு பதில் தருவார் என்கின்ற வாக்குத்தத்தம் உங்களுக்கு இருக்கிறது. ●

பெண்கள் பகுதி

# உள்ளதையெல்லாம் கொடுத்தவன்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

அருமையான சகோதரிகளே! இம்மாதமும் உங்களோடு கூட சேர்ந்து வேத வசனங்களை கற்றுக் கொள்ள தேவன் கொடுத்த சிலாக்கியத்திற்காக அவருக்கு ஸ்தோத்திரம். வேதாகமத்தில் காணப்படும் பெண்களின் வாழ்க்கை மூலமாக, எல்லாக் காலத்திலும் வாழும் பெண்கள் அறிந்து கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய உள்ளன. மாற்கு 12 ம் அதிகாரம் 41 முதல் 44 முடிய உள்ள வசனப்பகுதியில், நினைவு கூறப்பட வேண்டிய ஒரு பெண் இருக்கிறாள். நாம் தேவனுக்கு செய்ய வேண்டிய முக்கிய கடமை களில் ஒன்றை அவள் வாழ்க்கை நமக்கு கற்று கொடுக்கிறது. அதென்ன வென்றால் ஒரு கிறிஸ்தவனுக்கும், பணத்திற்கும் உள்ள உறவு பற்றியது.

**தேவனும், மனிதனும், பொருளாதார உடமைகளும்:**

அருமையானவர்களே, எப்போதுமே தேவனுக்கும், மனிதனுக்கும், அவனுடைய உடமைகளுக்கும் சம்பந்தம் இருந்து கொண்டேயிருக்கிறது. ஆதியிலே முதல் குடும்பம் தொடங்கின காலத்திலிருந்து, மனிதன் தனக் குள்ளதை பலியாக செலுத்தும்படி தேவன் கட்டளை கொடுத்துள்ளார். எனவே, அநேகர் நினைப்பது போலல்லாது, இந்த விஷயத்தில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய உள்ளன. ஒரு கிறிஸ்தவனும், பணமும் சம்பந்தப்பட்ட காரியம் அன்றாடம் நடைமுறையில் இருப் பதாலும், ஒவ்வொரு தனி நபரையும் சந்தித்து கேட்டுக் கொண்டிருக்கும் கேள்வியாக இருக்கும். இப்பணத்தைப் பற்றிய பாடம் மற்ற பாடங்களைப் படிப்பதை விட மிகவும் பிரயோஜனமாயிருக்கும். ஒரு குழந்தை தன் பெற் றோரிடம் மிட்டாய் வாங்க காசு வாங்கும் சமயத்திலிருந்து தன் வாழ்நாள் பரியந்தமும் பணம் அவன் கையாளும் ஒன்றாக மாறிவிடுகிறது. மளிகை, துணிமணிகள் மற்ற தேவைகள் வாங்க போகும்போது அங்கே முடிவெ டுத்தல் கட்டாயமான ஒன்றாகும். பொதுவாக, பணம் செலவழிப்பதில் பெண் கள் பங்கு அதிகமாக இருக்கிறது. இது உண்மையாதலால், கர்த்தருக்கு கொடுக்கும் அளவு பற்றி முடிவெடுப்பதில் பெண்களின் தங்கள் முழு

ஒத்துழைப்பையும் கொடுக்க வேண்டியது மிக அவசியம்.

**கொடுத்தல் காரியத்தில் கிறிஸ்து மிகவும் அக்கறையுள்ளவ ராயிருந்தார்:**

இயேசு கிறிஸ்து கொடுத்தல் விஷயத்தில் மிகவும் அக்கறையள்ள வராயிருந்ததினால் காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்து கொண்டிருந்தார். ஏழையான ஒரு விதவையும் வந்து ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள். சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி, எப்போதும் ஆயத்தமாயி ருக்கும் நமதாண்டவர் இயேசு கிறிஸ்து, உடனே தம் சீஷர்களை தம்மிடம் அழைத்து, காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாயப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்கும் சொல்கிறேன் என்றார் (மாற்கு 12 : 41 – 44).

இங்கே இரண்டு வித்தியாசமான செல்வங்கள் பற்றி பேசப்படுகிறது. இந்த சம்பவத்தில், இந்த ஏழை விதவை உலகப் பொருளில் ஏழையாகவும் தேவ நீதியில் பணக்காரியாயும் இருந்தாள். அவளுடைய பணப்பை மெலிந்ததாகவும்,ஆத்துமாவோ கொழுத்தும் காணப்பட்டது. ஒருவர் சரீரப் பிரகாரமான செல்வம் பெற்றிருப்பது தவறல்ல. ஆனால், தேவனோடும் செல்வந்தனாக இருக்க வேண்டும். அது அவசியம். முற்பிதாவாகிய ஆபிர காம், யோசேப்பு, பக்தன் யோபு போன்றவர்கள் செல்வச் சீமான்களாக இருந்து கொண்டு நீதிமான்களாயும் இருந்தார்கள். ஒருவன் எவ்வளவு ஐசு வரியமுள்ளவனாயிரந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்பதை விளக்கும் வகையில் ஐசுவரியவான் ஒருவனை **மதிகேடனே!** என்று சொல் லிவிட்டு ( லூக்கா. 12 : 15-20 ). தேவனிடத்தில் ஐசுவரியவனாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான் (வ. 21) என்று நாம் பயன் பெறும்படி சொல்லியிருக்கிறார். தேவனுக்குப் பயப்படுகிற ஒருவன் செல்வம் இல்லாமல் வாழ முடியும். ஆனால், செல்வந்தன் ஒருவன் தேவன் இல்லாமல் வாழ முடியாது. ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும், நீதியும் என்னிடத்தில் உண்டு ( நீதி.8 : 18 ). தேவன் கொடுக்கும் ஐசுவரியம், நீதி இவைகள் நிலைத்து நிற்கக்கூடியது. எவ்வளவு அழகான கருத்தாக இது இருக்கிற தென்று பாருங்கள். இந்த ஏழை விதவையிடம் இரண்டு காசு கள்தான் இருந்தன. ஆனால், நிலையான ஐசுவரியத்தையும் நீதியையும் அவள் பெற்றிருந்தாள். மேலும், கிறிஸ்து இரண்டு வகையான செல்வத்தைப் பற்றி பேசுகிறார். " பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங் களைச் சேர்த்து வைக்க வேண்டாம்... பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களைச்

சேர்த்து வையுங்கள் ..... " (மத். 6 : 19 ,20). பணம் சம்பாதிப்பதும், அதை சேர்த்து வைப்பதும் தவறல்ல. ஏனென்றால், வேதாகமத்தில் வேறு இடங்களில் இந்த இரண்டையும் செய்யச் சொல்லுகிறது. ஆனால், இந்த வசனப்பகுதி ஆவிக்குரிய செல்வம் முதலிடம் பெற வேண்டும். உலக செல்வம் அதற்கு பின்னாகத்தான் செல்லவேண்டும் எனக்கூறுகிறது.

**கொடுப்பதை ஏன் தேவன் நமக்கு கட்டளையிட்டிருக்கிறார்?**

தேவன் நமக்கு கொடுத்திருக்கும் எந்தக் கட்டளையும் பாரமான வைகள் அல்ல. காரணமற்றவைகளும் அல்ல. கொடுக்கும் விஷயத்தில் ஏன் தேவன் நமக்கு கட்டளையிட்டிருக்கிறார் என்று நாம் புரிந்து கொண் டால் கட்டாயமாக நாம் தாராளமாகவும், மனமுவந்தும் கொடுப்போம். கட்டளை என்றால் என்ன? " கட்டாயம் செய்யப்பட வேண்டிய ஒன்று ". நம்முடைய நன்மைக்காக தேவன் கொடுக்கச் சொல்கிறார். அது எவ்வாறு நமக்கு நன்மையை கொண்டுவரும்?

முதலாவது, " உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் " (மத். 6 : 21 ) நம் இருதயம் ஆவிக்குரிய காரியங்களை தைரியமாக கொண்டிருக்க வேண்டும். அது நம்மைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்ல உதவியாய் இருக்கும். எந்தக் காரியத் திற்காக அதிகம் செலவழிக்கிறோமோ அந்தக் காரியத்தில் அதிக நாட்டமும், அதற் காக வேலை செய்யவும் நம்மை தூண்டும். நம் பொக்கிஷத்தின் இடமானது நம் இருதயத்தை பிரதிபலிக்கும். கர்த்தருக்குக் கொடுக்கத் தவறும் போது அந்த இருதயம் சாவுக்கேதுவான வியாதியுடையதாக இருக்கிறது. ஆவிக்குரிய இருதய பிரச்சனை. நம் ஆத்துமாவை அழித்துவிடும். இது ஒரு நீங்கா வியாதி. இருதயத்தின் தொல்லைகள் நீங்கி ஆவிக்குரிய காரியங் களில் நாட்டம் செலுத்தும்போது, பெலமான இருதயம் பெறப்பட்டு கர்த்தருக்காகத் தாராளமாய் கொடுக்கலாம்.

இரண்டாவதாக, தேவனைப் போலவும், கிறிஸ்துவைப்போலவும் இருப்பதற்காக நாம் கொடுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்த வத்தின் துவக்கமே கொடுத்தல் தான். தாராளமாய் விரிக்கும் கரங்களும், தான தர்மங்களைச் செய்யும் கைகளுமே (எபி. 13 : 16) தேவன் மிகச்சிறந்த முதன்மையான தன் ஒரே குமாரனையே கொடுத்தார். கிறிஸ்து தன் விலை யேறப்பெற்ற உடமைகளான இரத்தத்தையும், உயிரையும் கொடுத்தார். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் மனமுவந்தும், தாராளமாயும் கொடுத் தார்கள். சிலர் தங்கள் உயிரையே கொடுத்தார்கள். ஆனால் கிறிஸ்தவர்கள்

என்று சொல்லிக் கொள்கிறவர்கள் கொடுக்கிறதின் அர்த்தமே இன்னதென்று தெரியாமல் கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள். மனப்பூர்வமாக கொடுக்கும் பழக்கத்தை பெற்றுக்கொள்ளும் போதுதான் நாம் கிறிஸ்துவைப் போல வாழ்ந்து கிறிஸ்துவத்தைப் பரப்ப முடியும்.

மூன்றாவதாக, கொடுத்தல் மூலமாக நாம் தேவனை கிட்டிச் சேர முடியும் (1 கொரி. 9 : 14). அதோடு அவரில் அதிக அன்பு செலுத்த முடியும். நாம் எந்த ஒரு காரியத்திற்காக தியாகம் செய்கிறோமோ, அதில் அதிக அன்பு செலுத்துவோம், இந்தத் தத்துவம் தான் பெற்றோர் பிள்ளைகளில் அன்பு காட்டுவதில் அடங்கியிருக்கிறது. பிள்ளைகள் பெற்றோரிடம் அன்பு கூறுவதற்கு இது பொருந்தாது. ஏனென்றால், பெற்றோர் தான் பிள்ளைகளுக்காக தியாகம் செய்கிறார்கள். அவர்கள் தான் பிள்ளைகளை உலகிற்குள் கொண்டு வருவதில் இருந்து, அவர்கள் சுகவீனத்தில் அதிக நேரத்தை செலவிடுதல், கஷ்டப்பட்டு உழைத்து அவர்கள் தேவைகளை சந்திப்பது, அவர்களுக்காக திட்டமிடுதல், நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்துதல் போன்றவைகளுக்காக தியாகம் செய்கிறார்கள். எப்படி இவ்வாறு செய்ய முடிகிறது? **அன்பு தியாகத்தை கொடுக்கிறது. தியாகம் அன்பைக் கொடுக்கிறது** (1யோ.4:9,10). இவை இரண்டும் பிரிக்க முடியாதவைகள்.

இதின் மேன்மையை உணர்ந்ததின் காரணமாகத்தான் இயேசு காணிக்கை போடும் இடத்தில் உட்கார்ந்தார். தன்னைப் பின்பற்றுகிறவர்கள் தங்கள் நன்மைக்காக இப்பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று இயேசு அறிந்திருந்தார்.

நான்காவதாக, சுவிசேஷம் பரவுவதற்காக நாம் கொடுக்க வேண்டும் (1 கொரி, 9 : 14) பணம் இல்லாமல் உலகெங்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல முடியாது. ஆத்தும ஆதாயத்தில் நமக்கு விசுவாசம் இருக்குமானால், கொடுக்கிற விஷயத்திலும் நமக்கு விசுவாசம் இருக்க வேண்டும்.

ஐந்தாவதாக, தேவையில் இருப்பவர்களைத் தாங்குவதற்காக நாம் கொடுக்க வேண்டும் ( II கொரி. 8 : 1-5) தேவையில் இருப்பவர்களைக் கண்டு கொள்ளாமல் இருப்போமானால் நாம் கிறிஸ்தவர்களாயிருக்க முடியாது. சபையானது இதற்குப் பொறுப்பாக இருப்பதினால், இதை நிறைவேற்ற பணம் தேவைப்படுகிறது.

அருமையானவர்களே! மேற்கண்ட காரியங்களில், இந்த ஏழை விதவையின் பங்கு என்ன என்பதை அடுத்த மாதத்தில் பார்ப்போம்.

(தொடரும்)

வாலிபர் பகுதி

# அழிவுக்கு முன்னானது அகந்தை

Bro. பென்னி மார்ட்டின்

வாலிபர்களாகிய உங்கள் யாவருக்கும் வல்லவராம் இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். " தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமை யினாலும், ஆறுதலினாலும் நம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல் லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. ( ரோமர் 15 : 4 ) வேதாகமத்தின் சம்பவங்கள் அதை வாசிப்பவர்கள் எல்லோருக்குமே மிகப் பெரிய பாடங்களைப் போதிக்கிறது. கிறிஸ்தவனுடைய மிகப்பெரிய பிரச்ச னையாக பெருமை இருந்து வருகிறது. தேவன் அகந்தையான மனிதர் களை கண்டித்திருக்கிறார் அதுப் பற்றிய சில உதாரணங்களை நாம் இப்போது பார்ப்போம்.

**I யூதா ராஜாவாகிய உசியா ( II நாளா 26 )**

உசியா தன்னுடைய பதினாறாவது வயதில் ராஜாவானான். தன்னு டைய ஆவிக்குரிய ஆலோசகரான சகரியாவின் சீர்மிகு வழிநடத்துதலின் கீழ் ஞானமாக அரசாட்சி செய்து தேவனுக்குப் பிரியமாக நடந்து கொண்டான். அவன் தன் சிருஷ்டிகருக்குப் பிரியமான ஆராதனையை ஏறெடுத்தான். அதற்குப் பதிலாக திரளான ஆசீர்வாதங்களை அவரிட மிருந்து பெற்றுக் கொண்டான். " அப்படியே அவன் கீர்த்தி வெகுதூரம் பரம்பிற்று; அவன் பலப்படு மட்டும் ஆச்சரியமாய் அவனுக்கு அனுகூலமுண்டாயிற்று. (வச 15)

ஆனால், அகந்தையின் காரணமாக அவன் துரிதமாக விழுந்தான். அவனுடைய புகழும், வல்லமையும் அகந்தையாக மாறியது. அவன் கர்த்தருக்கு விரோதமாக எழும்பினான். அவனுடைய அகந்தை தூப பீடத் தின் மேல் தூபங்காட்ட அவனைத் தூண்டியது. அதை அசரியா உட்பட 81 ஆசாரியர்கள் எதிர்த்தார்கள்? உசியா ஆசாரியர்களின் செயல்பாட்டினை உதாசீனப்படுத்தினான். ஆசாரியர்கள் வழிவழியாக ஆரோன் வம்சத்திலி ருந்து வந்தவர்கள். அதனால் பின்வரும் தண்டனைக்குப் பாத்திரமானான்.

**தண்டனை**

A. தேவனுடைய ஆசீர்வாதம் எடுத்துக் கொள்ளப்பட்டது (வசனம் 18)

B. அவன் நெத்தியிலே குஷ்டரோகம் பிடித்துக் கொண்டது. அவன் ஆச ரிப்பு வேலைகளைச் செய்யத் தகுதியில்லாதவனாகும்படி குஷ்டரோகம் தண்டனையாக் கொடுக்கப்பட்டது (19, 21)

C. அவன் ராஜாக்கள் அடக்கம் பண்ணப்படும் கல்லறையில் அடக்கம் பண்ணப்படவில்லை. (வசனம் 23)

## II பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ( தானியேல் 4 )

தானியேல் நான்காம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிற நேபுகாத்நேச்சாரின் இரண்டாம் சொப்பனத்தில் தற்காலிகமாக அவன் எப்படி கிருபையிலிருந்து விழுவான் என்று காட்டப்பட்டிருக்கிறது. நித்திய மானவர் அவனுக்கு மகிமையையும், வல்லமையையும், செழிப்பையும் கொடுத்திருந்தார். ஆனால், அவன் பெருமையுள்ளவனாகி, சர்வவல்ல மையுள்ள கர்த்தரின் வல்லமையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனென் றால், அவன் இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால் என் மகிமை பிரதாபத்துக்கென்று ராஜ்யத்துக்கு அரண்மனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொல்லியிருந்தான் (வசனம் 30). அவன் தன் அகந்தையான வார்த்தைகளைப் பேசி முடிப்பதற்கு முன்பே, பரத்தி லிருந்து ஒரு சத்தம் வந்து அவனைக் கண்டித்து காட்டில் மிருகங்களுடன் ஏழு வருடங்கள் வாழும்படி செய்தது (வச 31, 32) இந்த நேபுகாத்நேச்சார் தன்னுடைய பெருமையினால் கீழ்காணும் தண்டனைகளுக்குப் பாத்திரமானான்.

A. மனித சமூகத்திலிருந்து துரத்தப்பட்டான்

B. ஒரு மிகப்பெரிய ராஜா தன் உணர்வுகளை இழந்து காட்டு மிருகத்தைப் போல் நடந்து கொள்வதை விட அவமானம் வேறெதுவும் இல்லை.

## III கோலியாத் ( I சாமுவேல் 17 )

இந்த கோலியாத் தன்னுடைய அகந்தையினால் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்தித்தான், தேவ மனுஷனாகிய தாவீதை அற்பமாக எண்ணினான். " நான் உன் மாம்சத்தை ஆகாயத்துப் பறவை களுக்கும் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன் " என்று பெருமையுடன் தாவீதிடம் கோலியாத் சவால் விட்டான் ( வ 44 ) . ராட்சச மனிதனாகிய கோலியாத் தாவீதின் உண்மையான மதிப்பை அறியாதிருந்தான். யுத்தத் தில் கோலியாத் எவ்விதத்திலும் தாவீதுக்கு இணையானவல்ல, தாவீது கோலியாத்தின் தலையை பரிசாக வீட்டிற்கு எடுத்துச் சென்றான்.

பிரியமான வாலிபச் செல்வங்களே, மேற்கண்ட உதாரணங்களிலிருந்து அகந்தையினால் அழிந்து போனவர்களைப் பற்றி கற்றுக் கொண்டோம். இது நமக்கு " அழிவுக்கு முன்னானது அகந்தை: விழுதலுக்கு முன்னானது மன மேட்டிமை என்பதை நினைவுப்படுத்துகிறது. (நீதி 16 : 18). பெருமை உள்ளவர்களுக்கு தேவன் எப்போதுமே எதிர்த்து நிற்கிறார். பெருமை என்பது பெயரளவில் கூட நம் வாழ்வில் இல்லாதபடி நாம் பார்த்துக் கொண்டால் தேவன் நமக்காகத் தரவிருக்கும் ஆசீர்வாதங்களை அள்ளித் தருவார். தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கும் தாழ்மையை தரித்துக் கொண்டால் நாம் கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி தடம் பதிக்க முடியும். அப்படிச் செய்ய தேவன் தாமே உதவி செய்வாராக ! ஆமென். ●

---

## தீர்க்கதரிசனப் புத்தகங்களும், செய்திகளும்

1. ஏசாயா - நியாயத்தீர்ப்பும் / ஆறுதலும்
2. எரேமியா - அழைப்பு
3. புலம்பல் - இறுதிச்சடங்கு
4. எசேக்கியேல் - பொய்யான நம்பிக்கை
5. தானியேல் - தேசங்கள்
6. ஓசியா - உண்மையற்ற மனைவி
7. யோவேல் - கர்த்தருடைய நாள்
8. ஆமோஸ் - சீயோனில் ஒரு காரியம்
9. ஒபதியா - ஏதோம்
10. யோனா - நினிவே
11. மீகா - இஸ்ரவேல் / யூதா
12. நாகூம் - நினிவேயின் அழிவு
13. ஆபகூக் - பாபிலோன்
14. செப்பனியா - யோசியா
15. ஆகாய் - ஆலயம்
16. சகரியா - சீர்திருத்தம்
17. மல்கியா - அலட்சியம்

சிறுவர் பகுதி

# சாமுவேல்

Bro. ஏபில் நாயகம்

எனக்கு பிரியமான சிறு தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். அனைவரும் நலமாக இருக்கிறீர்களா? தினந்தோறும் வேதாகமத்தை வாசிக்கிறீர்கள் என நம்புகிறேன். அது போல மாதந்தோறும் வெளிவரும் சிறுவர் பகுதியின் பாடங்களைப் படித்து பயன்டைகிறீர்கள் எனவும் நம்புகிறேன். சரி, குழந்தைகளே! இந்த மாதம் நாம் சாமுவேலைக் குறித்து சில காரியங் களை படித்துக் கற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள தேவ மனிதர்களில் சாமுவேல் மிக முக்கியமான ஒரு நபர். சாமுவேல் என்ற பெயருக்கு " தேவனு டைய நாமம் " என்று அர்த்தம். சாமுவேல் – அவன் தாய் அன்னாள் செய்த ஜெபத்திற்கு பரிசாக கிடைத்தவன். ஆம், அன்னாள் அநேக நாள் குழந்தை இல்லாமல் இருந்தாள். அவள் தேவனை நோக்கி ஊக்கத்தோடு குழந்தை வேண்டும் என்று ஜெபம் செய்தாள். தேவன் அன்னாளின் ஜெபத்தைக் கேட்டு, சாமுவேலைக் குழந்தையாக் கொடுத்தார்.

அன்னாள் தேவனிடம் குழந்தைக்காக ஜெபம் செய்தபொழுது, ஒரு பொருத்தனை செய்தாள். அதென்னவென்றால் தேவன் ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவனை தேவனுக்கு அவருடைய ஆலயத்தில் பணிசெய்வதற்கென்று விட்டுவிடுவேன் என்று. சரி, என்ன நடந்தது? சாமுவேல் நான்கு வயதான போது, தன் அம்மா தேவனிடத்தில் செய்த பொருத்தனையை நிறைவேற்ற ஆயத்தமாயிருந்தான். அந்த வயதில் சாமுவேலுக்கு " பொருத்தனை " என்றால் என்ன என்று தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் தன் தாய் சொன்ன வார்த்தைகளுக்கு அவன் " அப்படியே " கீழ்ப்படிந்திருக்கிறான். பிள்ளைகளே! உங்கள் பெற்றோர்கள் சொல்லும் காரியங்களுக்கு நீங்கள் சாமுவேலைப் போல " எதிர் பேசாமல் அப்படியே " கீழ்ப்படிகிறீர்களா? தினமும் வேதம் வாசிக்க வேண்டும், ஜெபிக்க வேண்டும், சபைக்குச் செல்ல வேண்டும், சபை வேலைகளைச் செய்ய வேண்டும் என்றெல்லாம் பெற் றோர் சொல்லும் பொழுது நீங்கள் என்ன செய்கிறீர்கள்? சாமுவேலி டமிருந்து நாம் " கீழ்ப்படிதல் " என்ற பாடத்தை கற்றுக் கொள்ள வேண்டும். சரியா? 4 வயதிலும் அவன் கீழ்ப்படிந்திருக்கிறான்.

அடுத்ததாக, சாமுவேல் தேவனுடைய ஆலயத்தில் படுத்துக்கொண்டிருக்கையில் கர்த்தர் சாமுவேலைக் கூப்பிட்டார். மூன்று முறை கூப்பிட்டார். கூப்பிட்டது யார் என்று தெரியாமல், அது ஏலியாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்து ஏலியிடம் போய் எதற்காக கூப்பிட்டீர்கள் என்று சாமுவேல் கேட்டான். ஆனால் கூப்பிட்டது கர்த்தர் என்று ஏலிக்கு புரிந்திருந்தது. ஆகவே, சாமுவேலிடம் இன்னொருமுறை சத்தம் கேட்டால் " சொல்லும் அடியேன் கேட்கிறேன் " என்று சொல்லச் சொன்னார். அதைப் போலவே கர்த்தர் கூப்பிட்ட போது " சொல்லும் கர்த்தாவே அடியேன் கேட்கிறேன் " என்று சாமுவேல் சொன்னான். தேவன் சாமுவேலோடே பேசினார். இங்கே பாருங்கள்! சாமுவேலே என்று கூப்பிட்டபோது, கர்த்தருடைய ஆசாரியன் கூப்பிடுகிறார் என்று எண்ணி அவருக்கு " உதவ " இரவு நேரத்தில் அவன் மூன்று முறை எழுந்தான். ஏலி வயதான நிலையில் இருந்தார் (I சாமு 2 : 22). வயதான ஏலிக்கு " உதவ " அவன் ஆயத்தமாயிருந்தான். பின்பு, ஏலி தாத்தா சொன்னதை " அப்படியே செய்தான் ". தேவனுடைய மனுஷன் சொன்ன வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்தான். பிள்ளைகளே! நீங்களும் தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். அவர்கள் சொல்லும் காரியங்களுக்கு " அப்படியே கீழ்ப்படிய வேண்டும் ". அப்பொழுது சாமுவேலை ஆசீர்வதித்த தேவன் உங்களையும் ஆசீர்வதிப்பார். ஆமென். ●

---

# நாளும் நடப்பும்

1. கூடங்குளம் 2 ஆவது அணு உலையில் மின் உற்பத்தி தொடங்கியது.
2. வெளிநாடுகளில் கருப்புப் பணம் பதுக்குவது குறைந்துள்ளது: ஜேட்லி.
3. வன்முறைச் சம்பவங்களில் பலியாகும் அப்பாவி மக்களுக்கு ரூ.5 லட்சம் நிதி – மத்திய அரசு முடிவு.
4. நேபாள உச்ச நீதிமன்றத்துக்கு பெண் தலைமை நீதிபதி – நாடாளு மன்றம் ஒப்புதல்.
5. ரொனால்டோ தலைமையிலான கால்பந்து போட்டியில் போர்ச்சுகல் "யூரோ கோப்பை" யை வென்று சாதனை.

# மனுஷராலே கூடாதது, தேவனாலே கூடும்!

Bro. K. பாண்டியன்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர் உங்களை எல்லா புத்திக்கும் மேலான சமாதனத்தினால் நிரப்புவாராக. எனக்கன்பானவர்களே மேற்கண்ட தலைப்பு நமக்கு நன்கு அறிமுகமான ஒன்று. அதாவது, ஒரு பணக்கார வாலிபன் நம் ஆண்டவரிடம் ஆவிக்குரிய ஆலோசனை பெற வந்த போது அவனுடைய ஏராளமான சொத்துக்களை விற்று ஏழைகளுக்கு கொடுத்தால் பரலோகத்தில் பலன் கிடைக்கும் " என்றார். அவன் துக்கமடைந்து பின்வாங்கிய போது " ஐசுவரியவான் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது அரிது என்றார் ஆண்டவர். அதைக்கேட்டு சீஷர் ஆச்சரியப்பட்டு போனார்கள். காரணம் அப்போதிருந்த யூதர்கள் பெரும்பாலும் ஐசுவரியவான்களாக இருந்தார்கள். எனவே " அப்படியானால் யார் ரட்சிக்கப்படக்கூடும் " என்ற கேள்வியை சீஷர்கள் எழுப்புகிறார்கள். அதற்குத்தான் ஆண்டவர் " மனுஷரால் இது கூடாதுதான்; தேவனாலே எல்லாம் கூடும் " என்றார்.

இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய உண்மை நிறைய இருக்கிறது. நாம் "முடியவே முடியாது, நடக்கவே நடக்காது என்று நினைக்கும் காரியங்கள் எல்லாம் தேவனாலே நடத்திக் காண்பிக்கப்படுகிறது. நம்முடைய வாழ்க்கையிலேயே அநேக உதாரணங்களை நாம் பார்க்க முடியும். நீங்கள் ஒரு நாள், உதவிக்காக கண்டிப்பாக அவர்களிடம் போவீர்கள் என்று நினைக்கும் மனிதர் முன்பாக நாம் தலைநிமிர்ந்து நடக்கச் செய்ய நம் தேவனாலே ஆகும் அல்லவா? அவரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை என்பது தேவன் நமக்குக் கொடுக்கும் வாக்குத் தத்தம் ஆகும். அவருடைய மகத்துவம் மற்றும் வல்லமையை நாம் அறிந்து உணரவே வேதம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எரோமிய தீர்க்கன் சொல்வதைக் கேளுங்கள். **ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும், வானத்தையும், பூமியையும் உண்டாக்கினீர்: உம்மாலே செய்யக்கூடாத அதிசயமானக் காரியம் ஒன்றும் இல்லை.** (எரேமி 32:17)

மனுஷரால் கூடாத காரியங்கள் அநேகம் இருந்தாலும் இவ்வுலக ஞானம் " உன்னால் முடியும் " என்று ஏமாற்றுகிறது, பொதுவாக இவ்வுலகம் மேட்டிமையில் அன்பு கூருகிறது. அதாவது மேன்மை / மேட்டிமை / பெருமை இவற்றை " லவ் " பண்ணுகிறது. அதைத்தான் யோவான் மூப்பர் முதலாம் நிருபம் இரண்டாம் அதிகாரத்தில், ஜீவனத்தின் பெருமை தேவனால் அல்ல, இவ்வுலகத்தினால் உண்டானது ; அது அழியும் என்று குறிப்பிட்டுள்ளார். நாம் அனைவரும் அறிந்திருந்தாலும், உணராது இருக்கும் ஒரு விஷயம் நம் மரணம். அதை மேற்கொள்ள மனிதனால் முடியாது. தேவ பார்வையில் மனுஷனுடைய ஆயுசு நாட்கள் ஒன்றுமில்லாததைப் போல் இருக்கிறது. சீக்கிரம் பறந்துபோகிறோம் என்று மோசே தன் சங்கீதத்தில் பாடியுள்ளான். மட்டுமல்ல, ஞானி பிரசங்கியும் தன் மரணத்தின்மீது மனுஷனுக்கு அதிகாரமில்லை ஆவியை விடாதிருக்கப் பண்ண முடியாது. (பிர 8 : 8) என்கிறார். இன்று அநேகர் பணம் இருந்தால் எல்லாம் சாதித்துவிடலாம் என்று எண்ணுகிறார்கள். ஆனால், அந்த பணத்தால் தன் சகோதரனுடைய ஆத்துமாவை நரகத்திலிருந்து மீட்க முடியாது என்கிறது வேதம் ( சங் 49 : 8 -10 ) அதனுடைய விளக்கமாக ஏழை லாசரு, ஐசுவரியவான் எடுத்துக்காட்டுதலில் மரித்தவன் உயிரோடு எழுந்து சென்று நரகத்தின் கொடுமையைச் சொன்னாலும் இந்த ஜனம் நம்பாது. மாறாக, வேதவசனத்தை ஏற்றுக் கொள்வதினாலேயே ரட்சிப்பை அறியமுடியும் என்கிறார் நம் ஆண்டவர்.

இன்னுமாக, மனிதனால் தன் தலைமயிரை வெண்மையாக்கவோ, கருமையாக்கவோ கூடாது என்று பார்க்கிறோம். இன்றைக்கு அநேகர் தலைச்சாயம் மூலம் நிறத்தை தற்காலிகமாக மாற்றலாமே தவிர, சுய சக்தியினால் ஒன்றும் கூடாது என்கிறது வேதம். அதே போல், தன் சரீர உயரத்தை ஒரு முழம் கூட்டவோ, குறைக்கவோ முடியாது என்ற உதாரணத்தையும் நாம் பார்க்கிறோம். ஆக, மனிதனால் கூடாத காரியங்கள் அநேகம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. எந்த " ஹார்லிக்ஸும் " ஜப்பான்காரனை உயரமாக்காது, எந்த " பேர் அன் லவ்லி " யும் ஆப்பிரிக்காக்காரனை சிவப்பாக்காது ! வேதமும் எத்தியோப்பியன் தன் நிறத்தை மாற்றக் கூடுமோ என்று எரேமியா 13 : 23ல் கேள்வி கேட்கின்றது. இப்படிப் பட்ட வாழ்க்கையில் தேவன் என்ன செய்யக் கூடும் என்று பார்ப்போம்.

" தேவனாலே எல்லாம் கூடும் " என்ற சொற்றொடர் மனிதனுக்கு தேவையான, அவசியமான நன்மைகள் எந்த சூழ்நிலையிலும், எந்த அற்பமான நபரைக் கொண்டோ, பொருளைக் கொண்டோ அவரால் அற்புதத்தை நடப்

பிக்க முடியும் என்பதையே விளக்குகிறது. அதற்கான ஆதாரங்களை விளக்குவதே அவர் தந்த வேதம். இருளில் வாழும் மனிதனுக்கு வேதமே வெளிச்சமாயுள்ளது. மனுஷருடைய இயலாமையையும் அதில் தேவன் வல்லமையால் இடைபட்டு உதவி செய்வதையும் சில வேத உதாரணங்கள் மூலம் நாம் காணலாம்.

பெயர்செபா வனாந்திரத்தில் தன் பிள்ளை இஸ்மவேலுடன் அலைந்து திரிந்து ஆகார் தண்ணீர் இல்லாமையால் நா வறண்டு சாகும் தருவாயில் இருந்தாள். தன் மகன் சாகும் கொடிய காட்சியைக் காண விரும்பாமல், அவள் ஒரு செடியின் கீழ் அவனை விட்டு சற்று தூரமாய் போய் சத்தமிட்டு அழுதாள் என்று காண்கிறோம் (ஆதி 21 : 16) ல் இதன் தொடர்ச்சியான வசனமோ தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார் என்று ஆரம்பிக்கின்றது ! என்ன காரணம் என்று பார்த்தோமானால், உதாரணத்திற்கு சாலை விபத்தில் ஒரு தாயும், குழந்தையும் கீழே விழுந்தால் முதலில் நாம் குழந்தையைத் தானே தூக்கி உதவி செய்வோம். அந்த வண்ணமாக தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டு ஆகாருக்குத் தண்ணீர் இருக்கும் இடத்தைக் காண்பிக்கிறார். இந்தப் பகுதியில் தேவன் அவளுடைய கண்களைத் திறந்தார் என்று வாசிக்கின்றோம். பிரியமானவர்களே, நமக்கான தேவைகளுக்கு தேவன் முன்னதாகவே ஆயத்தம் பண்ணி வைத்திருக்கின்றார். அதைக் காண நம் கண்கள் திறக்கப்பட வேண்டியுள்ளது. இதைத்தான் பவுல் அப்போஸ்தலன் தேவனுடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்று நீங்கள் அறியும் படிக்கு, அவர் **உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன் ( எபேசி 1 : 19 )** என்று நமக்காக ஜெபிக்கின்றார். ஆகவே, விசுவாசியே ! கலங்காதே, உனக்கான தேவைகளைச் சந்திக்க வல்லமையுள்ள தேவன் ஆயத்தமாயுள்ளார்.

அதே வண்ணமாய் சாப்பிட ஒன்றுமில்லாத கொடிய பஞ்சகாலத்தில் ஒரு கைப்பிடி மாவும் கொஞ்சம் எண்ணையும் வைத்திருந்த சாறிபாத் விதவையின் பதில் எலியாவை அசர வைக்கவில்லை என்பதை கவனியுங்கள். தேவன் சொன்னது " உன்னைப் பராமரிக்கும்படி அந்த விதவைக்கும் கட்டளையிட்டேன் " என்பது. ஆனால், அவளோ நானும் என் பிள்ளையும் அந்தக் கொஞ்ச உணவை உண்டு செத்துப்போக இருப்பதாகச் சொல்கிறாள். விசுவாசியான எலியா அந்தக் கொஞ்ச மாவில் ஒரு சிறிய அடையை கேட்டார். அதையும் அந்தப் பெண் தந்தாள். ஆனால், நடந்தது என்ன? பஞ்சகாலம் முழுவதும் அந்தப் பானையில் மாவும், கலசத்தில் எண்ணெயும் குறைந்து போகவில்லை. நமக்கும் இதுதான்

சவால்! சூழ்நிலை நம்மை பயமுறுத்தும்போது அதை வார்த்தைகளில் நாம் மிகைப்படுத்திப் பேசி விடுகிறோம். ஆனால், நினைவில் வையுங்கள் எல்லாம் செய்ய வல்ல தேவனை நாம் ஆராதிக்கின்றோம். அதனால் தான் ஊழியர்கள் சபை போதனைகளில் தேவனுக்கு என்று அதிகமாகக் கொடுங்கள் என்று உங்களை உற்சாகப்படுத்துகிறார்கள். கொடுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும் என்ற நம் ஆண்டவரின் போதனைப்படியே தேவன் நம் வருமானத்தை ஆசீர்வதித்து உயர்த்த அவராலே ஆகும் ( I ராஜா 17 : 14 )

எலியாவின் சீடன் எலிசா காலத்தில் ஒரு தீர்க்கதரிசியின் மனைவி கண்ணீரோடு அவனிடத்தில் வந்து தன் புருஷன் இறந்துவிட்டதாகவும் அவர் வாங்கிய கடனுக்காக தன் இரு பிள்ளைகளை அடிமைகளாகப் பார்க்கி றார்கள் என்றும் முறையிட்டாள் அதற்கு எலிசா, " வீட்டில் உன்னித்தில் என்ன இருக்கிறது என்று சொல் " என்றான். தேவனாலே எல்லாம் ஆகும். ஆனால், நம்மிடத்தில் இருப்பதை அவரிடம் தெரிவிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். பின் நடந்ததை நாம் அறிவோம். அவளிடத்தில் இருந்த ஒரே குடம் எண்ணெய் பலநூறு பாத்திரங்களில் தேவன் பெருகச் செய்தார். என்னிடத்தில் ஒன்றுமில்லை என்று சொல்லாதே! நாம் தேவனை நம்பி வாழும்போது எதிர்பாராத விதமாக நம் தேவைகளைச் சந்திக்க தேவனாலே ஆகும். (II ராஜா 4 : 6,7 ) உணவை மனிதன் சமைக்கலாமே தவிர உருவாக்க முடியாது. ஒரு நெல்மணியைக் கூட எந்த விஞ்ஞானியாலும் உண்டாக்க முடியாது. அதினால் தான் வேதம் விளையச் செய்கிறவர் தேவனே! என்று பறைசாற்றுகிறது. மனிதனால் ஐந்து இட்லியை வைத்து ஒருவரை மிஞ்சினால் இருவரது பசியை ஆற்றலாம். ஆனால், தேவனால் 5000, 4000 என்று நம் கற்பனைக்கு எட்டாத அளவில் ஜனங்களை திருப்தி செய்ய அவராலே ஆகும் அல்லவா? நம் தேவைகளுக்காக மனுஷரை அல்ல தேவனையே சார்ந்திருக்க இயேசு ஆண்டவர் வற்புறுத்து கிறார். அவருடைய சபை வாழ்வில் நீ முழுமையான ஈடுபாட்டுடன் இருக்கும் போது உன் உலகத் தேவைகளை நிச்சயம் தேவன் சந்திப்பார். உன் ஆறு நாள் வேலையின் ஆசீர்வாதம் வாரத்தின் முதல் நாளின் சபை கூடுதலில் நீ காண்பிக்கும் ஈடுபாட்டின் அடிப்படையிலே அமையும் என்பதை மறவாதே.

நிறைவாக, நம் தலைப்பு மனுஷரால் கூடாதது தேவனாலே கூடும் என்று இருக்கிறது. எல்லாவற்றையும் செய்யவல்ல தேவனை நாம் விசுவா சிக்கும் போது, அவருக்கு பயந்து நடக்கும் போது உங்களாலும் கூடும் என்று இயேசு போதிக்கின்றார். மத் 17 : 20 ல் " **கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் இந்த மலையைப் பார்த்து அப்புறம் போ என்று சொல்ல**

அது அப்புறம் போம். உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் ” என்று பிசாசை விரட்ட முடியாத சீஷர்களிடம் ஆண்டவர் சொன்னார். ஆகவே, இப்போது நாம் சந்திக்கும் பிரச்சனை, கவலை, துன்பம் எதுவானாலும் அதை மேற்கொள்வோம் என்ற விசு வாசமே நம்முடைய தேவையாய் இருக்கிறது. நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். உலக சிநேகிதம் தேவனுக்கு விரோதமான பகை. அது உன் விசுவாசத்தைக் குன்றச் செய்யும். கிறிஸ்துவின் உபதேசம், சபை கூடுதல், சபை மக்களின் ஐக்கியமே நம் விசுவாசத்தை வளர்க்கும். எங்கே இரண்டு அல்லது மூன்று பேர் என் நாமத்தினாலே கூடுகிறார்களோ அவர்கள் மத்தியில் ஆண்டவர் இருப்பார். ஆகவே, ஞாயிறு ஆராதனை மட்டுமல்ல சபையின் மற்ற கூட்டங்களிலும் கலந்து கொண்டு விசுவாசத்தில் பெலப்படுங்கள். அப்போது உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது. சர்வவல்லமையுள்ள தேவன் உங்கள் ஆவிக்குரிய வாழ்வை பெலப்படுத்துவாராக. கிறிஸ்துவின் சமாதானம் நம் அனைவ ரோடுங் கூட இருப்பதாக! ஆமென். ●

---

## அப்போஸ்தலன் பவுல் - சில தகவல்கள்

### I பிறப்பு

- பென்யமீன் கோத்திரம்
- பெற்றோர் – யூதர்கள் (பிலி. 3 : 5)
- ரோமனுக்குண்டான சிலாக்கியம் (அப். 22 : 28)
- சகோதரி உண்டு (அப். 23 : 16)

### II பிறப்பிடம்

- சிலிசியா நாட்டிலுள்ள தர்சு (அப். 21 : 19)

### III ஆரம்ப கால பயிற்சி

- பரிசேயனாக வளர்ப்பு (அப். 23 : 6)
- கிரேக்கக் கல்வியும் பயின்றுள்ளார் (அப்.17 : 28)
- கூடாரம் பின்னும் தொழில் கற்றவர் (அப். 18 : 3)
- மோசேயின் பிரமாணத்தில் தேர்ச்சி
- கமாலியேலிடம் பாடம் கற்றவர் (அப். 22 : 3)
- தேவனுக்கு வைராக்கியம் (அப். 22 : 3)
- யூத மதத்தில் தேர்ச்சி (கலா. 1 : 14)
- யூதர்களால் அறியப்பட்டவர் (அப். 26 : 4, 5)

# சோதனையில் நம் நிலை

Bro. K.M. பிலிப்

அன்பானவர்களே! அனைவருக்கும் மீட்பர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் வாழ்த்துக்கள். மாற்கு 4 : 35 – 41 இப்பகுதியில் ஆவியான வரால் நமக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ள சரித்திர நிகழ்ச்சியிலிருந்து நம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு சில பாடங்களை நாம் கற்றுக் கொள்வோம். கற்றதில் நிலைத்து நிற்க தேவன் நமக்கு உதவி செய்வாராக.

இப்பகுதியில் " இயேசுவும், 12 சீடர்களும் இரவு நேரத்தில் படகில் அக்கரைக்குப் பயணம் சென்று கொண்டிருக்கிறார்கள். இயேசு படகில் நித்திரை செய்கிறார். நடு இரவில் கடலில் திடீரென்று சுழல் காற்று உண்டாகி, கடல் அலைகள் படகின் மீது மோதியது. பயந்து போன சீடர்கள் இயேசுவை எழுப்பி, " போதகரே! நாங்கள் மடிந்து போவது உமக்கு கவலையில்லையா ? " என்றார்கள். இயேசு எழுந்து காற்றையும், கடலையும் அதட்டினார். உடனே கடலில் அமைதல் உண்டாயிற்று. பின்பு இயேசு சீடர்களை நோக்கி, " ஏன் இப்படி பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமல் போயிற்று? " என்றார். ஒரு கேள்வி கேட்ட சீடர்களுக்கு, இரண்டு கேள்விகளை பதிலாகக் கொடுக்கிறார். பதிலாக மட்டுமல்ல அவர்களது அற்ப விசுவாசத்தைக் கடிந்து கொள்கிறார் (மத 8 : 26). இன்று இவ்விரு கேள்விகளும் நம்மை நோக்கி கேட்கப்படுமானால் நம் நிலை என்னவாக இருக்கும் என்பதைச் சற்று ஆராய்ந்து பார்ப்பது நலம் என்று கருதுகிறேன்.

**முதல் கேள்வி** – " ஏன் இப்படி பயப்பட்டீர்கள்? " இந்த சீடர்களை சற்று உற்று நோக்கினால், இவர்கள் இயேசு அழைத்த உடனே பயப்படாமல், விசவாசத்தோடு பின்பற்றி வந்தவர்கள். இயேசுவோடு உண்டு, உறங்கி, உறவாடியவர்கள். அவருடைய அதிகாரமிக்க உபதேசங்களையும், அற்பு தங்களையும் கண்டு ஆச்சரியப்பட்டவர்கள். இயேசுவோடு கூடவே இருக்க வேண்டுமென்று எல்லாவற்றையும் விட்டு வந்தவர்கள். பாராட்டுக்குரிய இவர்களை சோதனை எதிர்கொண்ட பொழுதுதான் இவர்களுடைய உண்மை நிலை வெளிப்பட்டது. " நாங்கள் மடிந்து போகிறோமே " என்று பயந்து, கலங்கி கதறினார்கள். தனக்கேற்ற சீடர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்த்த இயேசுவுக்கு ஏமாற்றத்தையே கொடுத்தார்கள்.

இவர்களைப் பார்த்துத்தான் " ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? " என்றார்.

அன்பானவர்களே! நம் நிலையும் இதுவே. இயேசுவின் சுவிசேசம் நம்மை அழைத்த உடனே, உறவுகள், பாரம்பரியம், மனித உபதேசம் என்று " எல்லாவற்றையும்விட்டு " சத்தியத்தை மட்டும் பின்பற்றும் விசுவாசத் தோடும், தைரியத்தோடும் நம்மை ஒப்புக் கொடுத்தோம். சபை கூடுதல், அனுதினம் வேதம் வாசித்தல், ஜெபம், குடும்ப ஜெபம், ஊழியம் என்று விசுவாசக் கிரியைகளில் நிமிர்ந்து நின்றோம். ஆனால், சோதனைகள் நம்மை எதிர்கொள்ளும் பொழுதோ விசுவாசத்திற்குரிய " எல்லாவற்றையும் விட்டு விட்டு " தைரியமற்றவர்களாய், கேள்விக்குறிகளாய் கூனிக்குருகி நிற் கிறோம். இது எவ்விதத்தில் நியாயமாகும்? விசுவாசிகளின் தந்தை ஆபிரகா முக்கு தன் மகன் ஈசாக்கை பலியிடும் படியான சோதனை வந்த போது தயக் கமின்றி பலி கொடுக்கத் தன் கையை நீட்டி கத்தியை எடுத்தாரென்றால் அந்த தைரியம் எப்படி வந்தது? " ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டிருந்ததே. இப்படிப்பட்ட வாக்குத்தத் தங்களைப் பெற்றவன் மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன் வல்லவராயி ருக்கிறார் " (எபி 11 : 18) என்ற விசுவாசமே அந்த தைரியத்தைக் கொடுத்தது. ஆம், பயம் விசுவாச வீழ்ச்சிக்கு காரணம். பயங்கரமான தோற்றத்துடன் எதிரில் நின்ற கோலியாத்தைப் பார்த்ததுமே தேவ ஜனமாகிய இஸ்ரவேலின் சேனைகளின் உள்ளத்தில் பயம் குடி கொண்டது. விசுவாசம் விலகியது. "ஆனால், தேவபிள்ளை தாவீதோ இந்த சோதனையை சவாலாக ஏற்று. யுத்தம் கர்த்தருடையது " என்ற வாக்கைப் பிடித்துக் கொண்டு தைரியமாய் நின்று எதிரியை வீழ்த்தி சோதனையை மேற் கொண்டான் (1 சாமு 17).

அன்பான தேவ பிள்ளைகளே ! சோதனை நேரத்தில் தேவன் தன் பிள் ளைகளுக்கு கொடுத்திருக்கிற வல்லமையுள்ள வாக்குத்தத்தத்தை கவனி யுங்கள். ஆம் 'நம்மை (உங்களை) அழைத்த தேவன் உண்மையுள்ளவர்' (1 கொ 1 : 9). உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையை தாங்கத்தக்கதாக சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார் (1 கொ 10 : 13). இந்த வார்த்தை களை நம் அனுபவமாக்குவோம். பயத்தை பாதாளத்தில் தள்ளுவோம் ஆபிரகாம், தாவீது, தானியேல், எஸ்தர் போன்று தைரியமாய் நிமிர்ந்து நிற்போம். சோதனைகளை மேற்கொள்வோம். இப்படி பயந்து கலங்கி நின்ற சீடர்களைத்தான் " உலகத்தைக் கலக்குகிற வர்களாக மாற்றினார் (அப் 17 : 6) ஏன் இப்படி பயப்பட்டீர்கள்? " என்ற கேள்விக்கு இடங்கொடாமல், நாம் தைரியங் கொண்டு

" கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன் " என்று விசுவாசத்தோடு வாழ்வோம்' (எபி 13 : 6).

**இரண்டாவது கேள்வி** – ' ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமல் போயிற்று?

இரண்டாவது கேள்வி கேட்க வேண்டிய நிலைக்கு காரணமே, சீஷர்கள் கேட்ட " நாங்கள் மடிந்து போகிறோமே, உமக்கு கவலையில்லையா ? " என்ற கேள்விதான். இயேசு ஒன்றுமில்லாத சீடர்களை அழைத்து தன்னோடு கூடவே வைத்து, பிசாசின் மேலும், வியாதியின் மேலும் அதிகாரமுடையவர்களாய் மாற்றி (மாற் 3 : 14 : 15) , ஒருவரும் அறியாத இவர்களை உலகமே அறியும்படி உலகமெங்கும் சுவிசேசத்தை அறிவிக்கவும் (மா 16 : 15 ) பரலோகத்தில் உயர்த்தி அழகு பார்க்க வேண்டும் என்றும் உளமாரத் திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிற இயேசுவைப் பார்த்து, " உமக்கு கவலையில்லையா என்று கேட்கலாமா? இது நியாயமாகுமா? இப்படி இயேசுவின் அன்பை சந்தேகிப்பது எவ்வளவு மதியீனம்? அன்று நியாதிபதிகளில் ஒருவனாகிய கிதியோனைப் பார்த்து, தேவ தூதன் " பராக்கிரமசாலியே ! கர்த்தர் உன்னோடு கூட இருக்கிறார் " என்று சொன்னபோது, கிதியோன் " ஆ என் ஆண்டவனே! கர்த்தர் எங்களோடே இருந்தால் இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? (நியா 6 :13) என்கிறான். இதேபோல் ரூத்தின் மாமி நகோமி, " சர்வ வல்லவர் எனக்கு மிகுந்த கசப்பை உண்டாக்கினார், நிறைவுள்ளவளாய் போனேன்: கர்த்தர் என்னை வெறுமையாய் திரும்பி வரப்பண்ணினார் " ( ரூத் 1 : 20, 21 ) என்று புலம்புகிறாள். தங்களுடைய நிலைமைக்கு தங்கள் விசுவாசக் குறைவுதான் காரணம் என்பதை உணராமல் தேவனை குறை சொன்னார்கள்.

ஆம், இன்றும் அநேகர் சோதனை நேரத்தில் ஏற்படுகிற குறைவுகள், பிரச்சினைகள், போராட்டங்கள் குறித்து, " தேவனுக்கு கலலையில்லையா?" என்று தேவனின் அன்பையும், வல்லமையையும் சந்தேகிக்கிறவர்களாகவே இருக்கிறார்கள். அன்று சீடர்களுக்கு கிடைத்த அதே அழைப்பும், அன்பும், பாதுகாப்பும், பராமரிப்பும், பெருமையும் பரலோக பாக்யங்களும் இன்றும் கிறிஸ்து மூலம் தேவன் நமக்கு வாக்குக் கொடுத்திருக்கிறார். " கிறிஸ்து நமக்காக மரித்ததினால், தேவன் நம்மேல் வைத்த அன்பை விளங்கப் பண்ணுகிறார் (ரோ 5 : 8) இந்த தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால் அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது ( ரோ 5 : 5 ). ஆகவே, தேவனுடைய அன்பை நாம் சந்தேகிக்காமல் நாமும் அவரிடத்தில் அன்பு கூருவோம். " அவரிடத்தில்

அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கும்" (ரோ 8 : 38) என்று விசுவாசிப்போம். சோதனைக்கு எதிர்த்து நிற்போம்.

மேலும், சீடர்கள் ' நாங்கள் மடிந்து போகிறோம் ' என்று சொன்ன வார்த்தைகள், அவர்களுக்கு இயேசுவை அறிகிற அறிவு இல்லை என்பதையே வெளிப்படுத்துகிறது. சர்வவல்லமையுள்ள தேவனுடைய குமாரன் நம்மோடு இருக்கும் பொழுது, அவர் படகு கவிழும்படி விட்டுவிடுவாரா? என்ற அறிவின்மையால்தான் அவிசுவாசிகளாய் புலம்பினார்கள். சோதனையில் அநேகருடைய நிலையும் இதுவே. உலக ஞானி சாலமோன் ' தேவனை அறியும் அறிவைக் கண்டடைய வேண்டும் என்றும் (நீ 2: 5), அவரை அறிகிற அறிவிலே வளருங்கள் (11 பே 3 : 18), தேவனை அறிகிற அறிவிலே விருத்தியடையுங்கள் (கொலோ 1 : 10), தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவையும் அறிகிற அறிவினால் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் பெருகும் என்று பரிசுத்த ஆவியானவரும் தேவனை அறிகிற அறிவு அவசியம் என்பதை வலியுறுத்துகிறார்கள். பவுலாகிய சவுலும் கூட அறியாமையினால் ஆதித் திருச்சபை விசுவாசிகளைத் துன்பப்படுத்தினான். இயேசு தரிசனத்தில் அவனைச் சந்தித்தபோது ' சவுலே, சவுலே என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்? " என்று கேட்டார். இங்கு " யாரொருவன் விசுவாசிகளுக்கு எதிராய் செயல்படுகிறானோ, அது கிறிஸ்துவுக்கு எதிரான செயல் " என்பதே ஆவியானவர் நம் விசுவாச அறிவுக்கு கொடுக்கும் உற்சாகமான செய்தியாகும். மேலும் ' உங்களைத் தொடுகிறவன் என் கண்மணியைத் தொடுகிறான் ' ( சக 2 : 8 ) என்று தேவனுக்கும் நமக்குமுள்ள உறவை உறுதிப்படுத்துகிறார். நம் விசுவாச வாழ்க்கைக்கு எதிராய் எவ்வளவு பெரிய சோதனை வந்தாலும், தேவன் நம் பட்சத்தில் ( இருந்தால் ) இருக்கிறார். நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? (ரோ 18 : 31) ஒருவருமில்லை என்று தைரியப்படுவோம். " என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு " (பிலி 4 : 13) என்பதை விசுவாசிப்போம். நம் விசுவாசப் பயணத்தை உற்சாகமாய் தொடருவோம்.

இயேசு சீடர்களைப் பார்த்து ' அற்ப விசுவாசிகளே! ஏன் பயப்பட்டீர்கள்? என்று கடிந்து கொண்டாலும் அவர்களது விசுவாசத்திற்கு சோதனையாய் நின்ற காற்றையும், கடலையும் அமர்த்தி அமைதலை உண்டாக்கினார். அது மட்டுமல்ல அவர்களோடு இயேசுவும் பயணத்தைத் தொடர்ந்தார். சீடர்களுடைய பயணம் இயேசுவோடு அமைதியாய் தொடர்ந்தது. ஆம், நம்மில் விசுவாச ஓட்டத்தை துவக்கினவரான இயேசு, உலகத்தின் முடிவு பரியந்தம் நம்மோடிருந்து ஓட்டம் தொடரவும், சரியாய் முடிக்கவும் உதவி செய்வாராக, ஆமென்.

# "நாம் எப்படி வாழ்வோம்?"

## Bro. கிளின்டன் ஸ்ட்ராம்

தேவகிருபை நமக்கு இரட்சிப்பை கொண்டுவந்தது, மேலும், நாம் எப்படி வாழவேண்டுமென்று போதித்திருக்கிறது. இந்த அழகான வசனப் பகுதியை வாசியுங்கள்: ஏனெனில் எல்லா மனுவுருக்கும் இரட்சிப்பை அளிக்கத் தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சை களையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி....... (தீத்து 2:11,12).

முதலாவது, இரண்டு எதிர்மறையான காரியங்கள் இங்கே உள்ளன. இரண்டு காரியங்களையும் நாம் அறவே ஒழிக்க வேண்டும்.

1. **அவபக்தி.** அதாவது தேவபக்திக்கு எதிரான எல்லா காரியங்களுமே அவபக்தியானவைகள்தான். நாம் தீமையை எதிர்த்து நிற்க வேண்டும்.
2. லௌகிக இச்சைகள் சில வேளைகளில் இச்சை என்னும் வார்த்தை நல்லவிதமாகவும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இந்த வசனப் பகுதியில் மோசமான ஆசையாகத்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக, நம் வாழ்க்கை முறை சம்மந்தமாக மூன்று நேர்மறை யான தேவைகள் உள்ளன:

1. **தெளிந்த புத்தியுடன் வாழவேண்டும்.** கிறிஸ்தவர்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாகவும், சுயக்கட்டுப்பாடு உடையவர்களாகவும் நடந்து கொள்ள வேண்டும்
2. **நீதியாக வாழ வேண்டும்.** நாம் தேவனுடைய வார்த்தைக்கு இசைவான, செம்மையான வாழ்க்கை வாழ வேண்டும். தீமோத்தேயு பாலியத்துக் குரிய இச்சைகளுக்கு விலகியோடி, நீதியை அடையும்படி நாட அறிவுறுத்தப் பட்டார் (II தீமோத்தேயு 2:22).
3. **தேவபக்தியாக வாழவேண்டும்.** கிறிஸ்தவர்கள் பக்தியுள்ள தேவனுக்கு மரியாதை செலுத்துகிற வாழ்க்கை வாழ வேண்டும்.

நாம் கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்போது, **ஆனந்த பாக்கியத்துக்கும், மகாதேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்** (தீத்து 2:13).

தேவனுடைய ஆச்சரியமான கிருபைக்காக அவருக்கு கோடானகோடி ஸ்தோத்திரம்.

கடந்த ஜூலை 6-ம் நாள், வங்கக் கடலின் வேதாரண்யம் பகுதியில்
திருமுழுக்குப் பெற்றவர்களில் ஒருவர். சகோதரி. ரோஸ்மேரி



# World Evangelism Gospel Media

**Rajanayagam & Benny Martin in Tamil On Tamilan TV**

Monday 7:00 - 7:15 am
Thursday 9:30 - 10:00 pm
Saturday 7:15 - 7:30 am



**Arjunan In Tamil**

TV : Every Monday 7.30 pm and
Every Saturday 7.30 pm on Tamilan TV
Radio : Every Saturday 5:30- 5:45 pm on Sri Lanka Radio

**Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking**

Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

**P.K. Varghese In Malayalam:**

Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

**Philemon & Kingsley in Tamil:**



Tamilan TV : Sunday 6:45 - 7:00 pm
PudhuYugam TV : Tuesday 6:15 - 6:30 am

**P.R. Swamy & Douglas:**

Every Sunday to Wednesday At 5:30 - 5:45 pm
on 25 And 49 Meter bend of Sri Lankan Radio

**Joshua & Ricky Gootam In Telugu:**

Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

**For English Voice of Truth**

Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026

Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2015-2017
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2015-2017


## எங்களது இதர வெளியீடுகள்






சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்







# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |






## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்


- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.






இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701
Editor. S. Rajanayagam.